# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1918/18 - 2015 ජූනි මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.06.11

*1918/18 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 57

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

12 (2) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 12 (2) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, போத்தலில் நிரப்பப்பட்ட குடி தண்ணீர் உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகளுக்கும் பின்வருமாறு கட்டளையிடுகின்றது. பொதி செய்யப்பட்ட எல்லா குடி தண்ணீர் நிரப்பும் கொள்கலன்களும்/போத்தல்களும் பொலிமர் மூலப்பொருளால் ஆக்கப்பட்டதாகவும் கீழ் தரப்பட்டுள்ள இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட எஸ். எல். எஸ். (SLS) பண்டத் தரக்குறியீட்டினையும் கொண்டிருந்தாலன்றி உற்பத்தி செய்யவோ, விநியோகம் செய்யவோ, கொண்டு செல்லவோ, களஞ்சியப்படுத்தவோ அல்லது மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனைக்காக வைக்கவோ, விற்பனை செய்யவோ, விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ அல்லது விற்பனைக்கு விடவோ முடியாது என இத்தால் பணிப்புரை வழங்குகின்றது.

எஸ். எல். எஸ் 1336 : 2008 இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொலிமர் மூலப்பொருளால் செய்யப்பட்ட பொதி செய்யப்பட்ட குடி தண்ணீருக்கான கொள்கலன்களின் தரம் சான்றுப்படுத்தல்.

இப்பணிப்புரை 2016, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2015, யூன் 01.

06 - 759




இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.